



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளோடு, 2022 அக்டோபர் 10 அன்று அன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 234/77 ஆய்வுப் பயணத்தைத் தொடங்கினார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 234 தொகுதிகளுக்கும் நேரில் சென்று பள்ளிக் கல்வித்துறை சார்ந்த 77 பொருண்மைகளில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனும் நோக்கில் இந்தப் பெரும் பயணத்தைத் தொடங்கினார். இத்திட்டத்தின் கீழ் 200 ஆவது சட்டமன்றத் தொகுதியில் ஆய்வை நிறைவு செய்துள்ளார். இராமநாதபுரம் தொகுதியில் அமைந்துள்ள மாவட்ட மைய நூலகத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு 200 ஆவது தொகுதியையும் நிறைவு செய்துள்ளார். “200ஆவது ஆய்வை நிறைவு செய்து பயணத்தை மீண்டும் தொடங்கியுள்ளோம்” எனத் தெரிவித்துள்ளார்.

### மேற்கு மண்டல தி.மு.கழக சுற்றுச்சூழல் அணி ஏற்பாட்டில்

# சுற்றுச்சூழல் பயிலரங்கம் - சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கும் விழா!

### தலைமை : சு.முத்துசாமி முன்னிலை : கார்த்திகேய சிவசேனாபதி

கோவை, செப். 26 -

மேற்கு மண்டல தி.மு. கழக சுற்றுச்சூழல் அணி ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் பயிலரங்கம் மற்றும் சுற்றுச் சூழல் விருதுகள் வழங்கும் விழா வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் அயலக தமிழர் நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேற்கு மண்டலத்திற் குட்பட்ட கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கரூர் தி.மு.கழக சுற்றுச் சூழல் அணியின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் பயிலரங் கம் மற்றும் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கும் விழா இன்று (26.09.2024 வியாழக் கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கோவை ஜென்னிஸ் ரெசிடென்சி ஹாலில் வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் அயலக தமிழர் நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி முன்னிலையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் கழக சுற் றுச்சூழல் அணி துணைச் செயலாளர் மா.நாராயண மூர்த்தி வரவேற்புரையாற்று கிறார், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ந.மணிசுந்தர் பயிலரங்க அமர்வுகள் அறிமுக உரை யாற்றுகிறார்.

முனைவர் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், தமிழ்நாடு வன உயிரின வாரிய உறுப்பினர் ஓசை காளிதாசன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

திருப்பூர் வடக்கு மாவட் டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப் பினர் கா.செல்வராஜ், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செய லாளர் தளபதி முருகேசன், கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி இராமச் சந்திரன், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநக ராட்சி மேயர் ந.தினேஷ் குமார் கோவை மாநக ராட்சி துணை மேயர் வெற் றிச்செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் கலந்து கொள்ள உள்ளனர்.

இதில் சுற்றுச்சூழல் அணி மாவட்ட, மாநகர அமைப் பாளர்கள் பெ.இராமச்சந்தி ரன் நீலகிரி, எஸ்.கார்த்திக் குமார் கோவை வடக்கு, சூ.ஆ.விஜயகுமார் கோவை தெற்கு, பி.ஏ.சேகர் திருப்பூர் வடக்கு, கே.கே.செல்வம் ஈரோடு வடக்கு, இமயம் என்.எஸ்.சிவக்குமார் ஈரோடு தெற்கு, ரா.விநாயக மூர்த்தி நாமக்கல் கிழக்கு, என்.ரவிச்சந்திரன் நாமக்கல் மேற்கு, சாவி கே.நல்லுசாமி கரூர், தி.க.தண்டபாணி திருப்பூர் வடக்கு மாநகர், கேபிள் விஜய் திருப்பூர் தெற்கு மாநகர், கு. இளங்கோ ஈரோடு மாநகர், உள்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்விழாவின் இறுதியில் கோவை மாநகர் மாவட்டச் சுற்றுச்சூ ழல் அணி அமைப் பாளர் ஸ்ரீ சத்யா கோவை தங்கம் நன்றியுரையாற்று கிறார்.

# திருவாரூர் அரசுப் பள்ளிகளில் திடீர் ஆய்வு!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மேற்கொண்டார்!

திருவாரூர், செப். 26 -

தமிழ்நாடு அரசின் பள் ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி 234/77 எனும் பெய ரில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் நேரடி யாக சென்று பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகள், நூலகங்கள் மற் றும் அலுவலகங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழ்நாடு முதல்வர் - திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல் களின்படி நடைபெறும் இந்த ஆய்வில், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி யிலும், நன்னிலம் தொகுதி யிலும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டார். மன்னார் குடி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட நீடாமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி யில் விரிவான ஆய்வு மேற் கொண்டார்.

அங்கு நடைபெற்ற காலாண்டு தேர்வு மையத் தைப் பார்வையிட்டு, பள் ளியை தூய்மையாக வைத்தி ருக்க நடவடிக்கை எடுக்கு மாறு அறிவுறுத்தினார். பள் ளியின் மேம்பாட்டிற்கு ஆசி ரியர்கள் சில கோரிக்கை களை முன்வைத்தார்கள். அது தொடர்பாக மன்னார் குடி சட்டமன்ற உறுப்பின ரும் அமைச்சருமான டி.ஆர். பி.ராஜா அவர்களிடம் பேசு வதாக உறுதியளித்தார்.

அருகில் இருந்த ஒருங்கி ணைந்த பள்ளிக் கல்வி வட் டார வள மையத்திற்கும் சென்ற அமைச்சர் அங்கி ருந்த இல்லம் தேடிக் கல்வித் திட்ட தன்னார்வலர்களி டம் கலந்துரையாடியானர். அவர்களுக்கு வழங்குவதற் காக வைக்கப்பட்டிருந்த கற் றல் மற்றும் கற்பித்தல் உப கரணங்களைப் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து நன்னிலம் தொகுதிக்குட்பட்ட குட வாசல் கிளை நூலகத்திலும் திடீர் ஆய்வை மேற்கொண் டார். பழைய நூலக கட்ட டத்தை அகற்றுவது குறித்து நூலகரிடம் கேட்டறிந்தார். வாசகர்களிடம் கலந்துரை யாடி அவர்களின் கோரிக் கைகளைக் கேட்டறிந்தார்.

### புதுக்கோட்டை மாவட்டம், அயலகத் தமிழர்களுக்கு

# அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள்!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. வழங்கினார்!

புதுக்கோட்டை, செப். 26–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில், அயலகத் தமிழர்களுக்கு, அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா (24.09.2024) அன்று வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர்களின் நலனுக்காக பல் வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில், வேலைவாய்ப்பு, கல்வி, வணிகம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக தமிழர்கள் அயல் நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர்களின் நலன்காக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, “அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் மூலம் அயலகத்தில் உள்ள தமிழர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில், விடுமுறையில் தாயகம் வந்திருக்கும் அயலகத் தமிழர்கள் குடும்பத்தினர் உட்பட மொத்தம் 100 நபர்களுக்கு அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை பெற்றுள்ளவர்கள், விபத்து காப்பீட்டுத் திட்ட உதவித் தொகைகள், கல்வி உதவித்தொகைகள், திருமண உதவித் தொகை, ஓய்வூதியம் உள்ளிட்ட உதவித் தொகைகளுக்கு விண்ணப்பித்து பயனடைய முடியும்.

எனவே தமிழக அரசின் மூலம் அயலகத் தமிழர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும்.

இந்நிகழ்வில், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, வங்கி மேலாளர் த.நந்தக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் விடுமுறையில் தாயகம் வந்திருக்கும் அயலகத் தமிழர்கள் குடும்பத்தினர் உட்பட மொத்தம் 100 பேருக்கு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட முன்னோடி வங்கிகள் அலுவலர் நந்தகுமார், மாவட்ட நலவாரிய இணை ஆணையர் ராஜ் , தமிழ்நாடு அரசு அமைப்புசாரா தொழிலாளர் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் தெய்வானை பங்கேற்றனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெறும்

# சிறப்பு வாக்காளர் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணிகளின் பொறுப்பாளர்கள் நியமனம்!

### மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



1-1-2025 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் – திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 823 பாகங்களுக்கும்,

வருகிற 2024 அக்டோபர் 29 முதல் நவம்பர் 28 வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் இடமாற்றம் குறித்து நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாமில் கீழ்க்கண்ட மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஆவடி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்புக் குழு

பொறுப்புக்குழு தலைவர் : சண் பிரகாஷ்

தொகுதி பார்வையாளர் : ஆர்.டி.ஆதிசேசன்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | ஆவடிகிழக்குபகுதி திரு.பேபிசேகர் | மாவட்ட பொருளாளர் திரு.நரேஷ் |
| | | வழக்கறிஞர் அணி திரு.M.கார்த்திக் |
| 2 | ஆவடிமேற்குபகுதி திரு.பொன்விஜயன் | மாவட்ட துணை செயலாளர் திரு.ஜெயபால் |
| | | வழக்கறிஞர் திரு.B. ரமேஷ் |
| 3 | ஆவடிவடக்குபகுதி திரு.நாராயணபிரசாத் | மாவட்ட தொ.அணி அமைப்பாளர் திரு.நாகூர்கனி |
| | | வழக்கறிஞர் அணி திரு.A.அகஸ்டின் |
| 4 | ஆவடிதெற்குபகுதி திரு.ராஜேந்திரன் | மாவட்ட துணை செயலாளர் திரு.V.J. சீனிவாசன் |
| | | வழக்கறிஞர் அணி திரு.வே. கார்த்திக் |
| 5 | திருவேற்காடுநகரம் திரு.NEK மூர்த்தி | பொதுக் குழு உறுப்பினர் திரு.எத்திராஜ் |
| | | வழக்கறிஞர் திரு.D. ராஜ்குமார் |
| 6 | திருநின்றவூர்நகரம் திரு.தி.வை.ரவி | மாவட்ட அவைத்தலைவர் திரு.மா.ராஜி திரு குமார் |
| | | வழக்கறிஞர் அணி திரு.L. தேவராஜ் |
| 7 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம் திரு.தேசிங்கு | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் திரு.துர்காபிரசாத் |
| | | வழக்கறிஞர் அணி திரு.பொன்புனிதவராஜ் |

**பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பொறுப்பு குழு**

பொறுப்புக்குழு தலைவர் : திரு ஆ கிருஷ்ணாசாமி M.L.A.

தொகுதி பார்வையாளர் : மருத்துவர் திரு அருண் ஜெயகுமார்

| வ எண் | கழகநிர்வாகம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம் திரு.தேசிங்கு | மாநகர இளைஞரணி அமைப்பாளர் திரு.துர்காபிரசாத் |
| | | வழக்கறிஞர் அணி திரு.பொன்புனிதவராஜ் |
| 2 | பூவிருந்தவல்லிநகரம் திரு.GR திருமலை | மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திரு.சுரேஷ்குமார் |
| | | வழக்கறிஞர் அணி திரு.S. ராஜேந்திரன் |
| 3 | பூவிருந்தவல்லிகிழக்குஒன்றியம் திரு.கமலேஷ் | திரு AJ பவுல் திருமதி.காஞ்சனாசுதாகர் |
| | | வழக்கறிஞர் திரு.N.P. மாரிமுத்து |
| 4 | திருவள்ளூர்கிழக்குஒன்றியம் திரு.பிரேம்ஆனந்த் | திரு KJ ரமேஷ் திரு.குமரேசன் |
| | | வழக்கறிஞர் திரு.பா.முருகன் |
| 5 | திருவள்ளூர்மேற்குஒன்றியம் திரு.ஜெயசீலன் | திரு.மா.ராஜி |
| | | வழக்கறிஞர் திரு.S. செந்தில்குமார் |
| 6 | திருவள்ளூர்வடக்குஒன்றியம் திரு.புஜ்ஜிராமகிருஷ்ணன் | திருமதி சங்கீதா ஸ்ரீநிவாசன் திரு.மகாதேவன் |
| | | வழக்கறிஞர் திரு.PKE நாகராஜ் |
| 7 | எல்லாபுரம்மத்தியஒன்றியம் திரு.தங்கம்முரளி | திருமதி.காயத்ரிஸ்ரீதர் |
| | | வழக்கறிஞர் திரு.K.J. அன்பு |
| 8 | திருமழிசைபேரூர் திரு.தி.வே.முனுசாமி | பொது குழு உறுப்பினர் திரு.விமல்வர்ஷன் |
| | | வழக்கறிஞர் திரு.துரைபழனி |

மேற்கண்ட பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்களுடன் இணைந்து மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்கதீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் (திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ) எனது தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.கிருஷ்ணாசாமி எம்.எல்.ஏ., ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் மருத்துவர் அருண் உள்ளிட்டோர் இணைந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்களில் ஆய்வு மேற்கொள்வர் என்பதை தெரிவித்துத் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் :29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க/நீக்க / திருத்தம் செய்வதற்கு மற்றும் மனு கொடுக்க கால அவகாசம் :29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் : தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்கள்
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் :06.01.2025

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் – நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.